26.03.2026

O.S.No.459/2024

PW2- பலவேசம்– த/பெ. பரமசிவன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.03.2026

குறுக்கு விசாரணை : ( 2,3 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நெல் வியாபாரம் செய்கிறேன்.

2. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரிதான்.

3. வாதி கோமதிநாயகம் அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் பாப்பான்குளத்தில் தான் வசித்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. தபசில் சொத்தின் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

6. வழக்கு பிரதிவாதிகள் யார் என்றால் எனக்கு தெரியாது.

7. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் குத்தகை வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

8. வாதி சொல்லி தான் குத்தகை வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான்.

9. வாதிக்கு எந்தெந்த பகுதியில் என்னென்ன அளவுகளில் நிலங்கள் உள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

10. வாதி குடும்பத்திற்குள் ஏற்கனவே வழக்கு ஏதேனும் நடந்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

11. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் வாதி சொன்னதன் பேரில் தயார் செய்யப்பட்டது.

12. நான் வாதியால் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளதால் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளது போல் நான் வாதிக்காக எக்காலத்திலும் பாட்டம் அளந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. எனவே என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி